இந்திய உயர் ஸ்தானிகராலயம்
கொழும்பு

ஊடக அறிக்கை

இலங்கையின் கொழும்பில் இந்திய-இலங்கை போதைப்பொருள் கட்டுப்பாட்டு முகவரமைப்புகளின் தலைமை அதிகாரிகள் மட்டத்திலான 5ஆம் கட்ட பேச்சுகள்

இந்திய - இலங்கை போதைப்பொருள் கட்டுப்பாட்டு முகவரமைப்புகளின் தலைமை அதிகாரிகள்_மட்டத்திலான 5 ஆம் கட்ட பேச்சுகள் 2026 செப்டெம்பர் 23 ஆம் திகதி இலங்கையின் கொழும்பில் நடைபெற்றது.

02. 2025 ஏப்ரல் இந்திய பிரதமர் ஸ்ரீ நரேந்திர மோடி அவர்கள் இலங்கைக்கு மேற்கொண்ட உத்தியோகபூர்வ விஜயத்தின்போது கவனஞ்செலுத்தப்பட்ட இருதரப்பு பாதுகாப்பு ஒத்துழைப்பு விவகாரங்கள் மீதான புதிய செயற்பாடுகளை முன்னெடுப்பதனை இலக்காகக்கொண்டு இப்பேச்சுகள் முன்னெடுக்கப்பட்டன. குறிப்பாக போதைப்பொருள் கடத்தல்களை தடுக்கும் செயற்பாடுகள் தொடர்பாக கவனஞ்செலுத்தப்பட்டது. 2026 செப்டெம்பர் 09 ஆம் திகதி மாண்புமிகு பாதுகாப்பு அமைச்சர் ஸ்ரீ ராஜ்நாத் சிங் அவர்களுடன் கொழும்பில் நடைபெற்ற பேச்சுகளின்போது இலங்கை ஜனாதிபதி அதி மேதகு அநுரகுமார திசாநாயக்க அவர்களால் இந்து சமுத்திர பிராந்தியத்தில் போதைப்பொருள் கடத்தலுக்கு எதிரான நடவடிக்கைகளுக்கு இந்தியா பூரண ஆதரவினை வழங்க வேண்டுமென கோரிக்கை விடுக்கப்பட்டிருந்த நிலையில் அக்கோரிக்கைக்கு மேலும் முக்கியத்துவமளிப்பதாக இது உள்ளது.

03. இப்பேச்சுகளில் பங்கேற்ற இந்திய பேராளர்களுக்கு போதைப்பொருள் தடுப்பு பிரிவின் பிரதி பணிப்பாளர் நாயகம் ஆர் சுதாகர் அவர்களும், இலங்கை பேராளர்களுக்கு இலங்கை பிரதி பொலிஸ் மா அதிபர் திரு K.D.G.L. அஷோக தர்மசேனா, PNB, அவர்களும் தலைமை வகித்திருந்தனர். இந்திய பேராளர்களில் தமிழக பொலிஸ், கரையோரக் காவல் படை மற்றும் வெளியுறவுத்துறை அமைச்சின் அதிகாரிகளும் , இலங்கை பேராளர்களில் PNB அதிகாரிகளுக்கு மேலாக இலங்கை சட்டமா அதிபர் திணைக்களம், இலங்கை சுங்கம், அரச ஆய்வு திணைக்களம், விசேட அதிரடிப் படை, இலங்கை கடற்படை, NDDCB, நிதி புலனாய்வு பிரிவு உள்ளிட்ட துறைகளைச் சார்ந்த அதிகாரிகளும் கலந்துகொண்டிருந்தனர்.

04. இந்த பேச்சுகளில் போதைப்பொருள் கடத்தலின் புதிய போக்குகள், குறிப்பாக கடல் மார்க்கமான கடத்தல், ஒழுங்கமைக்கப்பட்ட குற்றவாளிகளைக் கண்டறிதல், ஒழுங்கமைக்கப்பட்ட குற்றங்கள் குறித்த புலனாய்வு மற்றும் விசாரணையில் செயற்பாட்டு முயற்சிகளை ஒருங்கிணைத்தல் போன்றவற்றை இரு தரப்பினரும் ஆய்வு செய்தனர். போதைப்பொருள் கடத்தல் வழிமுறைகள் குறித்து நடவடிக்கை எடுக்கக்கூடிய உளவுத் தகவல்கள் மற்றும் அதற்கான வழிகள் மற்றும் பொறிமுறைகள் ஆகியவையும் இதன்போது பகிரப்பட்டன.

5. சட்டவிரோத போதைப்பொருள் கடத்தல் செயரற்பாடுகளால் ஏற்படும் புதிய சவால்களை வினைத்திறனுடன் எதிர்கொள்வதற்காக, தமது போதைப்பொருள் சட்ட அமுலாக்க துறையினருக்கு இடையேயான நிறுவன ரீதியான ஒத்துழைப்பையும் ஒருங்கிணைப்பையும் மேலும் வலுப்படுத்துவதற்கும் இரு தரப்பினரும் இணங்கியுள்ளனர்

****

கொழும்பு
23 செப்டெம்பர் 2026